[1971 டிசம்பர் 4

நீதிமன்றக் கட்டணங்கள் திருப்பிக் கொடுத்தல்

*83 வினா.—திரு. க. சுப்பு : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவில் வழக்குகளில் கோர்ட்டுக்கு வெளியே வைத்து தாவாக்களைத் தீர்த்துக்கொள்வதால் கட்டப்பட்ட கோர்ட் கட்டணத்தில் பாதியைத் திருப்பித் தர உத்திரவானதில் சென்ற ஆண்டில் மாத்திரம் (1969-70) திரும்பப் பெறுமல் நிலுவையாய் இருந்த தொகை எவ்வளவு?

THE HON. THIRU S. MADHAVAN : Rs. 3,066.10 This is due to the delay in giving refund certificates.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, வினா எண் 84.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாக் கேள்விகளுக்கும் சப்ளிமெண்டரி கேள்விகள் அனுமதிக்கப்பட வேண்டுமென்பது இல்லை. அந்தந்தக் கேள்வியின் அவசியத்தைப் பொறுத்து, கேள்விக்குத் தேவை என்றால் துணைக் கேள்வி அனுமதிக்கப் படுகிறது.

திரு. க. சுப்பு: கேள்வி கேட்டவருக்கு ஒரு துணைக் கேள்வி கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி என்பது அந்தந்தக் கேள்வியைப் பொறுத்தது. 30 கேள்விகள் இன்றைக்குப் போடப்பட்டிருக்கின்றன. ஏராளமான துணைக் கேள்விகள் கேட்டால் பல கேள்விகள் நின்று விடுமோ என்ற நிலை இருக்கிறது. அந்தந்தக் கேள்வியின் முக்கியத்துவத்தைப் பொறுத்து துணைக் கேள்விகள் அனுமதிக்கப்படுகின்றன.

(THIRU K. SUPPU rose).—Let the hon. Member resume his seat.

கேள்வி எண் 84.

(THIRU K. SUPPU rose) The hon. Member is requested to resume his seat.

THIRU K. T. K. THANGAMANI : Sir, the Hon. Member who has tabled the question should be given an opportunity to put at least one supplementary question.

தூத்துக்குடி அருகிலுள்ள உப்பளங்கள்

*84 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அருகில் உள்ள மத்திய அரசுக்குச் சொந்தமான உப்பள நிலங்களை, தமிழ்நாடு அரசின் கோரிக்கை பேரில் அதற்குத் தரப்பட்டுள்ளதா ?